# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை சித்த உளவியல்சார் உயர் கற்கைநெறி திறந்த நிறுவனம் (கூட்டிணைத்தல்)

**இலங்கை சித்த உளவியல்சார் உயர் கற்கைநெறி திறந்த நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ புத்திக பதிரண அவர்களால் 2022, பெப்புருவரி மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2022, சனவரி மாதம் 31 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **105 ஆம் சட்டமூலம்** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கை சித்த உளவியல்சார் உயர் கற்கைநெறி திறந்த நிறுவனம் (கூட்டிணைத்தல்)

## இலங்கை சித்த உளவியல்சார் உயர் கற்கைநெறி திறந்த நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

"இலங்கை சித்த உளவியல்சார் உயர் கற்கைநெறி திறந்த நிறுவனமொன்று" அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப் பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட நிறுவனத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவனம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப் பித்துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

**1**. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை சித்த உளவியல்சார் உயர் கற்கைநெறி திறந்த நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இலங்கை சித்த உளவியல்சார் உயர் கற்கைநெறி திறந்த நிறுவனத்தைக் (கூட்டிணைத்தல்

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "நிறுவனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை சித்த உளவியல்சார் உயர் கற்கைநெறி திறந்த நிறுவனத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகை யோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டி ணைக்கப்பட்ட குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை சித்த உளவியல்சார் உயர் கற்கைநெறி திறந்த நிறுவனம்" என்னும் பெயர்மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும்; அத்துடன்

அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்; அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

**கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்**

**3.** கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) உளவியல் ஆலோசகர்களுக்கான முறையானதோர் அமைப்பொன்றினை பெற்றுக்கொடுத்தல்;

(ஆ) உளவியல்சார் கற்கைகளை ஊக்குவித்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் உளவியல் ஆலோசகர்களுக்கான தரத்தினை நிறுவுதல் மற்றும் வெளியிடல்;

(இ) நாட்டுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பல்வேறுபட்ட உளவியல் சுகாதார பிரச்சினைகளை தீர்த்துவைத்து அவர்களது உளவியல் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான உளவியல் ஆலோசகர்களை நாட்டினுள் உருவாக்குதல்;

(ஈ) நாட்டில் உள்ள பிரதான அரசகரும மொழிகளில் உளவியற் கல்வியை கற்றுக்கொடுத்து தனது தேசவத்தவர்களுக்கு தமது மொழிமூலம் உளவியல் ஆலோசனைச் சேவையை இலகுவில் வழங்கக்கூடிய திறமையான உளவியல் ஆலோசகர்கள் சமூகமொன்றினை இலங்கையினுள் தோற்றுவித்தல்;

(உ) நிறுவனத்தின் ஊடாக கல்வியை பெற்றுக்கொள்ளும் மாணவ, மாணவிகளை தகைமைபெற்ற உளவியல் ஆலோசகர்களாக உருவாக்குவதற்கு அவசியமான கல்வி மற்றும் மருத்து சிகிச்சைப் பயிற்சிகளை முறையாக

பெற்றுக்கொடுத்து உளவியல் ஆலோசகர்களாக இலங்கை சித்த உளவியல்சார் உயர்கற்கைநெறி திறந்த நிறுவனத்தினூடாக அனுமதிப்பத்திரம் வழங்கி அவர்களை கட்டுப்படுத்தல்;

(ஊ) முறையான கல்வி மற்றும் இறுதி மருத்து சிகிச்சை பயிற்சிகளை முடித்தமைக்கான சித்த உளவியல் ஆலோசக கவுன்சிலினூடாக சான்று பெற்ற மாணவ மாணவிகளுக்கு இலங்கை சித்த உளவியல்சார் உயர்கற்கைநெறி திறந்த நிறுவனத்தினூடாக சித்த சான்றிதழ் பெற்ற உளவியல் ஆலோசகர் சான்றிதழ் [Chiththa Certified Psychological Counsellor of Sri Lanka (CCPCSL)] பெற்றுக் கொடுத்தல்;

(எ) அனுமதி பெற்ற உறுப்பினர்களின் ஒழுக்கக் கோட்பாடுகள் தொடர்பாக விழிப்புடன் செயற்படுவதோடு அனுமதிச் சான்றிதழுக்கெதிரான ஒழுக்கக் கோட்பாடுகளை பின்பற்றுகின்ற உளவியல் ஆலோசகர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அல்லது உறுப்பான்மையை இடைநிறுத்தல்;

(ஏ) உளவியல் கல்வித் துறையில் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் பாடத்திட்டம் முதல் பட்டப்படிப்புக்கு குறையாத உயர் தேசிய டிப்ளோமா பாடநெறியொன்றினை வழங்கல்;

(ஐ) அனுமதி பெற்ற உறுப்பினர்களின் அறிவை வளர்ப்பதற்குத் தேவையான கருத்தரங்குகள், மாநாடுகளை அறையாண்டுதோறும் நடாத்துதல்;

(ஒ) உளவியல் கல்வி தொடர்பான கலைமுதுமாணி, விஞ்ஞானமுதுமாணி, கலாநிதி பட்டம் ஆகிய மட்டத்தில் உள்ள உறுப்பினர்களின் தொழில்ரீதியான உயர்ச்சிக்கு பட்டப்பின்படிப்பு தகுதிகளை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(ஓ) உளவியல் கல்வியைத் தொடர்கின்ற மாணவ, மாணவிகளுக்கும், சான்றிதழ் பெற்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனையோரினதும் உளவியற் கல்வி மேற்படிப்பு கற்கைகளுக்கான புத்தகங்கள், செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்ற அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் இரண்டிற்குமான நூலகங்களைக் கொண்டு நடாத்துதல் மற்றும் அவ்விரண்டு ஊடகங்களிலும் பாடவிதானத்துடனான விடயங்களை வெளியிடுவதற்கு மாணவ, மாணவிகள் மற்றும் உறுப்பினர்களை ஊக்குவித்தல்;

(ஔ) சான்றிதழ் பாடத்திட்டங்கள் முதல் உயர் தேசிய டிப்ளோமா வரையிலான பாடத்திட்டங்களுக்காக தீர்மானிக்கப்பட்ட சாதாரண மாணவர்களை பதிவு செய்வதற்கான கட்டணமொன்றினை மாதாந்த முறையில் அறவிடுதற்கும் உரிமம் பெற்றோரின் தமது உறுப்புரிமையை தொடர்ந்து பாதுகாத்துக் கொள்வதற் கான வருடாந்த கட்டணம் உட்பட நிறுவனத்தினூடாக பெற்றுக்கொள்ளப்படும் ஏனைய சேவைகள் தொடர்பில் சேவைக் கட்டணமொன்றை விதித்தல்;

(க) ஊக்கத்துடனும் அர்ப்பணிப்புடனும் தமது கல்வி திறமைகளை வெளிக்காட்டுகின்ற மாணவ, மாணவிகளுக்கு புலமைப் பரிசில்கள் மற்றும் நினைவுப் பரிசில்களை வழங்கல்;

(ங) நிறுவனத்தின் உப கிளைகளை ஆரம்பித்து அவற்றை முகாமை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல்;

(ச) அசையும் அசையா சொத்துக்களை பாதுகாப்பது உட்பட நிறுவனத்தின் ஊடாக வெளியிடப்படுகின்ற அச்சு மற்றும் இலத்திரணியல் அனைத்து மட்டத்திலுமான புத்தகங்கள் மற்றும் ஆக்கங்களை புலமைச் சொத்துக்கள் சட்டத்தின்கீழ் கலாசாலையினால் கட்டுப்படுத்தல்;

(ஞ) நிறுவனத்தை உருவாக்கிய தலைவர் தனது அதிகாரிகள் மற்றும் அவர் பொருத்தமென கருதுகின்ற தனது ஊழியர் களை நியமித்துக் கொள்ளவும் அவர்களது ஊதியங்களை வழங்கவும் இயலுமாதல் வேண்டுமென்பதோடு தலைவர் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கும் தருணத்தில் அல்லது சுகையீனமுற்றிருக்கும் நேரத்தில் தனக்கு விசுவாசமான அதிகாரியொருவரை பதில் பணிப்பாளராக நியமித்துக் கொள்ளவும் முடியும்;

(ட) தலைவர் ஓய்வு பெற்றதன்பின்னர் அல்லது அவரின் இறப்பின் பின்னர் புதியதோர் பணிப்பாளரை முறையானதோர் வாக்கெடுப்பின் மூலம் நியமித்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படும் பணிப்பாளர் நிறுவனத்தை உருவாக்கிய தலைவரின் அனைத்து தற்றுணிபுகளும் அதே அளவில் கொண்டவராக இருப்பார்;

(ண) பல்வேறுபட்ட பதவிகளுக்காகவும் நியமிக்கப்படும் நபர்கள் 5 ஆண்டுகள் தமது சேவையினை நிறுவனத்திற்கு வழங்கவேண்டுமென்பதோடு அவ்வாறு 5 ஆண்டுகள் முடிவடையுமுன்னர் பதவிவிலகும் அதிகாரிகளைப் பற்றிய பதவி விலகல் தொடர்பான அவர் தொடர்ந்தும் நிறுவனத்துடன் எந்தவித தொடர்புமற்றவராகப் பிரகடனப்படுத்திய அறிவித்தலொன்றை அச்சு ஊடகமொன்றில் விடுக்க நிறுவனத்திற்கு உரிமையுண்டு;

(த) உள்ளூர் மற்றும் வெளியூர் பல்கலைக்கழகங்களில் நடைபெறும் உளவியற்கற்கை தொடர்பான கருத்தரங்குகள், உபதேசங்கள், மாநாடுகளில் இலங்கை சித்த உளவியல்சார் உயர்கற்கைநெறி திறந்த நிறுவனம் முழுமையான ஈடுபாடுகளுடன் செயற்பட தயாராக இருத்தல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் குறிக்கோள்களின் அமுலாக்கலில் கூட்டிணைக்கப்பட்ட குழு அத்தகைய அமுலாக்கலானது இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற்கொள்கை, பிறப்பிடம் அல்லது ஏதேனும் அத்தகைய ஏதுக்கள் அடிப்படையிலான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுதல் வேண்டுமென உறுதிப்படுத்தல் வேண்டும்.

*அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் அமைச்சினது அல்லது திணைக்களத்தினது பணியுடன் முரண்பாடு இல்லாதிருப்பதனை கூட்டிணைக்கப்பட்ட குழு உறுதிப்படுத்துதல்*

**4.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிக்கும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத வகையிலான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்*

**5.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும் நிருவகித்தலும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களைக் கொண்டுள்ளதும் (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) முகாமைச் சபையினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற நிலையத்தின் முகாமைச்சபை, 7 ஆம் பிரிவின்கீழான விதிகளின்மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது சபை நியமிக்கப்படும் வரை அல்லது தேர்ந்தெடுக்கப்படுவரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் சபையாகப் பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது சபை இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து ஓராண்டிற்குள் நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) போஷகர்களும் மதியுரைநர்களும் உட்பட குழுவின் ஒவ்வொரு பதவிதாங்குநரும் மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென் பதுடன், அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், போஷகர் அல்லது மதியுரைஞர் சொல்லப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதி கழிந்ததன் பின்னர் மீளநியமிக்கப்படுவதற்கு அல்லது மீளத்தேர்ந்தெடுக் கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரொருவரின் இறப்பு, பதவிவிலகள், உடற்றகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், கூட்டிணைக் கப்பட்ட குழு, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப் பட்ட ஆள், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் தத்துவங்கள்

**6**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பதக்கவாறான எத்தன்மைத்தானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக்

கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கு எடுத்தல், நிர்மாணித்தல், புனரமைத்தல் மற்றும் வேறுவகையாகப் பெறுதலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக்கூடியவாறு அவற்றைக் கையாளுதலும் அல்லது கையுதிர்த்தலும்;

(ஆ) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி நிதிகளைக் கடனாகப் பெறுதலும் அல்லது திரட்டுதலும் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக் கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெறுதலும்:

ஆயின், சபையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்;

(இ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக் கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப்பிடுதலும், கைமாற்றுதலும், வாங்குதலும், விற்றலும், வழங்குதலும் மற்றும் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்துதலும், பேணுதலும், மூடிவிடுதலும்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை சபை தீர்மானிக்கக்கூடியதான அத்தகைய முறையில் முதலீடு செய்தலும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் அசையாத அல்லது தனிப்பட்ட ஆதனத்தைப் பொறுப்பேற்றலும், ஏற்றுக் கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிருவகித்தலும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்து தலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துதலும், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும் ; அத்துடன்

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களைத் தகுந்த முறையிலும் பயனுள்ள வகையிலும் நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான வேறெல்லாக் காரியங்களையும் செய்தலும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் விதிகள்

**7.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக்கூட்டத் திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் விடயங்களுள் எல்லாவற்றுக்குமாகவும் அல்லது அவற்றின் ஏதேனும் ஒன்றுக்காக இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதன வாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டிணைக் கப்பட்ட குழுவுக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கஞ் செய்தல், உறுப்பினர் களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் அல்லது அவர்களை பதவி நீக்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற் பாலனவான கட்டணங்களும்;

(ஆ) சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவி தாங்குநர்கள் பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் மற்றும் சேவையாளர்கள் என்போரின் நியமனத்திற்காக நியதிகளும் அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும் ;

(ஈ) சபையானது அல்லது அதன் ஏதேனும் உபகுழுவினது கூட்டங்களைக் கூட்டுதலிலும் நடாத்துதலிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல், அதன் கூட்டநடப்பெண் அத்துடன் அதில் அலுவல்களை நடாத்துதல்;

(உ) சபையினதும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உறுப்பினரொருவராகவிருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவாக கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும், கூட்டிணைக்கப்பட்ட குழுவைக் கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆக்கப்பட்ட விதி எதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றென்றாற்போன்று, அதேபோன்ற கூட்டமொன்றில் அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமைந்தொழுகுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு

**8**. சபையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். இதில் உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியம்

**9**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்

**10**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்றவொரு

கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில்புரியவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ளாரோ அக்கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

வருடாந்த அறிக்கை

**11.** (1) சபையானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையைக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து சமூகசேவைகள் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவைகள் ஒழுங்கமைப்பு (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூக சேவைகள் ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை

எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

*நிலையத்தினால் செலுத்த வேண்டிய வையும் நிலையத்திற்குச் செலுத்தப்படற் பாலவையுமான தனிசுகள்*

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான நிலையத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்பு களும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நிலையத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலன வான ஒப்பப்பணங்களும், உதவுதொகை களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு செலுத்தப்படலும் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழு அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்*

**13.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரிதாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வதற்கும் வைத்திருப்பதற்கும் சட்டப்படி ஆற்றலுடையதும், இயலு மாதலாகுதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும், அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள தத்துவத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்துதல்

**14.** எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டு மென்பதுடன் அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்ற வகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப் படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இலச்சினை

**15.** *(1)* கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினையானது, சபையின் இரு உறுப்பினர்களது முன்னிலையில் அன்றி எத்தகையதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன். அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதினின்று தனிவேறானதாதல் வேண்டும்.

*(2)* கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, சபையினால் முடிபு செய்யப்படக்கூடியவாறான சபையின் அத்தகைய பதவி தாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

கலைப்பின்போது எஞ்சியுள்ள ஆதனம்

**16.** *(1)* கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் கூட்டிணைக் கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களுக்கிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

*(2)* ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, பொதுக் கூட்டமொன்றில் சமுகமளித்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின்மூலம் கலைப்புக்கு நேர்முன்னர் தோதான நிறுவனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் ஏணையோரினதும் உரிமைகளைப் பேணுதல்

**17.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயல்களுக்கான நட்டோத் தரவாதம்

**15.** ஆள் எவரும் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் சுமத்தப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டுநடாத்துகின்ற நோக்கத்திற்காக நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்படவேண்டுமென கருதப்படுகின்ற ஏதேனும் செயலுக்காக ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வேறு ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் பொறுப்பாளியாகமாட்டார்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**19.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.